பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

03 09 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்கிறார்.
2. பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் நடைபெற்று வரும் செமிகான் இந்தியா மாநாட்டின் தலைமைச் செயல் அதிகாரிகள் வட்டமேஜைக் கூட்டத்தில் இன்று பங்கேற்கிறார்.
3. திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்த 505 வாக்குறுதிகளில் 364 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. தேர்தல் வாக்குறுதி தொடர்பாக முதலமைச்சரும், மாநில நிதியமைச்சரும் மாறுபட்ட தகவல்களை வெளியிட்டிருப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.
5. FIDE Grand Swiss செஸ் போட்டி உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்கிறார்.

இதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் திருச்சி செல்லும் குடியரசுத்தலைவர், பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் திருவாரூர் செல்கிறார்.

அங்கு நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் முனைவர் பட்டம் பெறும் 44 மாணவர்கள் உட்பட 771 மாணவ-மாணவியருக்கு அவர் பட்டங்கள் மற்றும் தங்கப் பதக்கங்களை வழங்க உள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் குடியரசுத்தலைவர் வழிபாடு செய்ய உள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் நடைபெற்று வரும் செமிகான் இந்தியா மாநாட்டின் தலைமைச் செயல் அதிகாரிகள் வட்டமேஜைக் கூட்டத்தில் இன்று கலந்துகொள்கிறார்.

இந்தக் கூட்டத்தின்போது இந்தியாவின் செமிகண்டக்டர் தயாரிப்பு சூழல் மற்றும் இத்தொழிலின் வளர்ச்சி குறித்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழில்துறையினருடன் பிரதமர் கலந்துரையாட உள்ளார்.

இதனிடையே இந்த மாநாட்டில் செமிகண்டக்டர் தயாரிப்பு மற்றும் ஆராய்ச்சி தொடர்பாக 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் செமிகண்டக்டர் தயாரிப்புக்கு ஊக்கமளிக்கும் வகையில் Deep Tech கூட்டணி அமைக்கப்பட்டிருப்பதாக மாநாட்டில் அறிவித்த அவர், புதிய ஒப்பந்தங்கள் மூலம் 100 கோடி டாலர் அளவிற்கு முதலீடுகள் உறுதி செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்தக் கூட்டணி வரும் காலத்தில் தூய்மை எரிசக்தி, உயிரி தொழில்நுட்பம், குவாண்டம் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளித் துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் சிப்-கள் உள்நாட்டு சந்தையிலும், சர்வதேச சந்தைகளிலும் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்த 505 வாக்குறுதிகளில் 364 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மேலும் 40 வாக்குறுதிகள் தமிழக அரசின் பரிசீலனையில் இருப்பதை உரிய தரவுகளோடு அமைச்சர்கள் திரு. தங்கம் தென்னரசு மற்றும் திரு. சிவசங்கர் விளக்கியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சரின் காலை உணவு திட்டம், நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற தேர்தல் அறிக்கையில் தெரிவிக்காத திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

மேலும் திமுக அரசு எளிதில் அணுகும் தன்மை மற்றும் பொறுப்புணர்வு உள்ளிட்ட அம்சங்களின் அடிப்படையில் செயல்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திமுகவின் தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டது தொடர்பாக முதலமைச்சரும், மாநில நிதியமைச்சரும் மாறுபட்ட தகவல்களை வெளியிட்டிருப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் மகளிர் உரிமைத் தொகை தவிர 99 சதவீத வாக்குறுதிகள் 2023ஆம் ஆண்டே நிறைவேற்றப்பட்டு விட்டதாக முதலமைச்சர் பேசிய காணொலியை பகிர்ந்துள்ளார்.

ஆனால் அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது 72 சதவீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக கூறியிருப்பது முதலமைச்சரின் கருத்துக்கு முரணாக உள்ளதால் அவர்கள் இருவரும் இதுகுறித்து மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

கிராமப்புற போக்குவரத்து இணைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் உயர்மட்ட பாலங்கள் கட்டப்பட்டு வருவதாக மாநில நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே பாலாற்றின் குறுக்கே 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர்மட்ட பாலத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

புதுப்பாக்கம்-வடஇலுப்பை கிராமங்களுக்கு இடையே கட்டப்பட்டுள்ள இந்தப் பாலத்தின் மூலம் பிரம்மதேசம், செய்யலூர் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் மக்கள் பயனடைவார்கள் என்றார்.

இதேபோன்று செய்யாறு-காஞ்சிபுரம் இடையே 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டப்பட இருப்பதாகவும் திரு. எ.வ. வேலு தெரிவித்தார்.

<<<<>>>>

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில்தான் மதுரை நகரில் பல்வேறு திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

மதுரையில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவில் முல்லைப் பெரியாறு அணை நீரைப் பயன்படுத்தி மதுரை மாநகருக்கான குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை மற்றும் ஆற்றின் கரையோரப் பகுதிகளில் விரைவுச் சாலைகள் அமைக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

இதேபோன்று குடிமராமத்து திட்டம் மூலம் கண்மாய்கள் தூர்வாரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் திமுக அரசு மாநிலத்தின் வருமானத்தைப் பெருக்காமல் மக்கள் மீது கடன் சுமையை அதிகரித்து வருவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

ஐ.நா. சபையின் மாணவர் கல்வி பயணத்தின் ஒரு பகுதியாக தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்ற நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த மாநாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவ-மாணவியர் 6 பேர் கலந்துகொண்டனர்.

இவர்களில் சேலத்தைச் சேர்ந்த மாணவர் அஷ்வாக்-கின் பேச்சுத்திறன் காரணமாக அவர் ஐ.நா. வளர்ச்சித் திட்ட சர்வதேச தூதராக மாறியுள்ளார்.

இது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக அந்த மாணவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Voice Byte - Ashwak - 30 Sec)

<<<<>>>>

ஓணம் பண்டிகையை முன்னிட்டு கேரளாவிலும், தமிழகத்திலும் கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ளன.

இதையொட்டி அத்தப்பூ கோலத்திற்கு தேவைப்படும் பூக்களின் விற்பனை அதிகரித்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை மலர்ச்சந்தையில் செண்டு மல்லி, செவ்வந்தி, மல்லிகை உள்ளிட்ட மலர்களுக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Rajasekaran - 45 Sec)

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

இந்தியா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமைக்கு அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்பின் கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கைகளே காரணம் என்று அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

ரஷ்யா கைப்பற்றியுள்ள க்ரீமியா பகுதியில் ரஷ்ய உளவு அமைப்பின் அலுவலகம் மீது ஃபிளமிங்கோ ரக ஏவுகணைகளை வீசி யுக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளது.

<<<<>>>>

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆஃப்கனிஸ்தானுக்கு இந்தியா சார்பில் 21 டன் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

எல்லைப் பகுதியில் வசிக்கும் நாகா சமுதாய மக்கள் பிரிந்து வாழும் சூழலை தவிர்க்கும் வகையில் எல்லைப் பகுதியில் வேலி அமைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதில்லை என்று அம்மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

**<<<<>>>>**

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட பாச்சிக்கோட்டையில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்படுவதை, மாநில அமைச்சர் திரு.மெய்யநாதன் பார்வையிட்டு, நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

**<<<<>>>>**

தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் கோவில் தெப்பத்திருவிழா, கோலாகலமாக நடைபெற்றது.

**<<<<>>>>**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில், பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி, திருவண்ணாமலையில் நடைபெற்றது.

**<<<<>>>>**

காஸா பகுதியில் வசிக்கும் பாலஸ்தீன மக்களை, இஸ்ரேல் தாக்குதலில் இருந்து பாதுகாக்க வலியுறுத்தி, விழுப்புரத்தில், மாற்றுத் திறனாளிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**<<<<>>>>**

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் அடுத்த தாளிக்கல் கிராமத்தில், குளத்தில் குளிக்கச் சென்ற மூன்று சிறுவர்கள், நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

**<<<<>>>>**

சென்னை விமான நிலையத்திற்கு 65 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்களை கடத்திவந்த வழக்கில் தப்பியோடிய நைஜீரிய இளைஞரை, சுங்கத்துறை தனிப்படை அதிகாரிகள் தில்லியில் கைது செய்து, சென்னைக்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

**<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

FIDE Grand Swiss செஸ் போட்டி உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 15ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியின் ஓபன் பிரிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா, D. குகேஷ், அர்ஜுன் எரிகைசி, விதித் குஜராத்தி, திவ்யா தேஷ்முக் உள்ளிட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

மகளிர் பிரிவில் நடப்புச் சாம்பியனான வைஷாலி ரமேஷ்பாபு, வந்திகா அகர்வால் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

**<<<<>>>>**

ப்ரோ கபடி லீக் போட்டியில் தில்லி மற்றும் ஜெய்ப்பூர் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் தில்லி அணி 41-34 என்ற புள்ளிக் கணக்கில் பெங்களூரு அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஜெய்ப்பூர் அணி 39-36 என்ற புள்ளிக் கணக்கில் பட்னா அணியை வென்றது.

இன்றிரவு 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஹரியானா - மும்பை அணியையும், 9 மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் புனே - பெங்கால் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<The End>>>>